கலாசிந்தாமணி

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு!"

—திருக்குறள்.

புத்தகம் 3	காளயுக்தி ௵ ஆடி ௴ ஜூலை ௴ 1918	சஞ்சிகை. 10

கடவுள் வணக்கம்

பன்மாலைத்திரளிருக்கத்தமையுணர்ந்தோர்
பாமாலைக்கேநீதான்பக்ஷமென்று
நன்மாலையாவெடுத்துச்சொன்னார்நல்லோர்
நலமறிந்துகல்லாதநானுஞ்சொன்னேன்
சொன்மாலைமாலையாக்கண்ணீர்சோரத்
தொண்டனேனெந்நாளுந்துதித்துநிற்பே
னென்மாலையறிந்திங்கேவாவாவென்றே
யெனைக்கலப்பாய்திருக்கருணை யெம்பிரானே.
கருணைமொழிசிறிதில்லேனீதலில்லேன்
கண்ணீர் கம்பலையென்றன்கருத்துக்கேற்க
வொருபொழுதும்பெற்றறியேனென்னையாளு
மொருவாவுன்னடிமைநானொருததனுக்கோ
விருவினையுமுக்குணமுங்கரணநான்கு
மிடர்செயுமைம்புலனுங்காமாதியாறும
வரவரவுமேழைக்கோரெட்டதான
மதத்தொடும்வந்தெதிர்த்தநவவடிவமன்றே.

—தாயுமானவர்.

1336-ஹு ஷவ்வால்மீ 1918-ஹு ஜூலை—ஆகஸ்டுமீ.

கே.	குரு சுக்
3-மி-து-சுக 8-சிங்-புத 20-து-செ 28-க-சு	சூ-ச புத.
ராகு	செ

காளயுக்தி ஹு ஆடி மீ

தக்ஷிணாயணம் சரருது	பசலி 1327 1328	சாலி 1840
கொல்லம் 1093.	கலியுகம் 5019	ஹிஜரி 1336

யோ	தேதி	ஆங். மீ.	தமிழ் மீ.	வாரம்.	திதி, நக்ஷத்திரம், முதலியன.
சி	7	16	1	செவ	அஷ 41-13, சித் 42-13, ரா 25-41, திட்சிணு
சி	8	17	2	புத	நவ 45-41-சுவா 48-38, சேஷ 2-28. [புண்ய
சி	9	18	3	வி	தச 49-22, விசா 53-57 தி 4-32. [காலம்
சி	10	19	4	வெ	ஏகா 51-56, அனு 58-8, தி 4-39, ஏகாதசி
சி	11	20	5	சனி	துவா 53-15, கேட் 60-0, தி 12-59.
ம	12	21	6	ஞா	திர 23-48, கேட் 0-50, தி 21-29, ரா 26-36.
சி	13	22	7	திங	சதுர் 52-8, மூல 2-48, சேஷ 2-9, தி 26-50.
சி	14	23	8	செ	○ பருவம் 49-14, பூரா 2-55, தி 32-29.
அ	15	24	9	புத	பிர 46-17, உத்திர 1-39, தி 11-27.
சி	16	25	10	வியா	துவி 41-52, திரு 0-27, துவி 58-35, தி 9-58
சி	17	26	11	வெ	திரி 36-45, சத 54-48 14-45, சித்தயோ
ம	18	27	12	சனி	சௌ 3 -6, பூரட் 50-51, தி 9-44. [கம்
அ	19	28	13	ஞா	பஞ் 25-5, உத்தி 46-42 , தி 13-11, அ. யோ
சி	20	29	14	திங்	ஷஷ்஠ 18-59, ரேவ 42-27, தி 14-36, அமிர்த
அ	21	30	15	செ	ஸப் 12-43, அசு 38-22, தி 29-2 [யோகம்.
சி	22	31	16	புத	அஷ்ட 7-10, பர 34-35, தி 0-51.
ம	23	1	17	வி	நவ 1-40, தச 54-38, ✱ கிரு 31-38, தி 3-6.
ம	24	2	18	வெ	ஏகா 52-7, ரோ-22-40, தி 9-39, ரா 10-30
சி	25	3	19	சனி	துவா 49-0, மிரு 27-15, ரா 16-12, வை.
சி	26	4	20	ஞா	திர 47-9, திருவா 26-39, ரா 25-5 [ஏகாதசி
அ	27	5	21	திங்	சது 46-7 புன 27-11, சேஷ 0-57, ரா 16-1
சி	28	6	22	செ	● அமா 46-32, பூச 29-1 [மாசசிவராத்திரி
சி	29	7	23	பு	பிர 48-15 ஆயி 32-12, தி 2 43
அ	30	8	24	விய	துவி 51-7, மக 36-13, தி 4-5, ரா 26-6.
சி	1	9	25	வெ	திரி 55-3, பூர 41-33, சேஷ 2-4, திருவாடி
உ	2	10	26	சனி	சௌ 59-40, உத்தி 47-25, தி 1-6. [பூரம்
அ	3	11	27	ஞா	பஞ் 60-0, ஹஸ் 53-59, தி 10-3. கருடபஞ்
மி	4	12	28	திங்	பஞ் 4-53, சித் 60-0, தி 16-10. [சமி
சி	5	13	29	செவ	ஷஷ்஠ 9-51 சித் 0-33 தி 15-38, [கம்
சி	6	14	30	புத	ஸப் 14-23, சுவா 6-39, தி 21-53. சித்தயோ
சி	7	15	31	வி	அஷ்ட 18-4, விசா 11-59 தி 22-42 [விரதம்
சி	8	16	32	வெ	நவ 20-44, அனு 16-10, சுமிராலட்55. 1வர

பண்டைத் தமிழரசரின் செங்கோன்மை

திராவிடரின் நீதி நூல்களும் ஏனைத் தமிழ்ப் பெருங்காப்பியங்களும் தென்னிந்தியா 1800, 1900-வருடங்கட்கு முன் அடைந்திருந்த நாகரிகத்தை நன்கு தெரிவிக்கின்றன. ஆரியர்கள் குடியேற்றத்திற்கு பல ஆண்டுகளுக்கு முன்னரேயே திராவிடர்கள் நாகரிகத்திற் றலை சிறந்து விளங்கினார்களென்பது சரித ஆராய்ச்சியால் அறியலாம்.

அக்காலத்தரசர்கள் தெய்வபத்தி, மதிநுட்பம் குடிகளிடத் தன்புடைமை, பட்சபாத மின்மை, முதலிய சிறந்த குணங்களை ஆபரணமாகப் பூண்டிருந்தார்கள். தீச்செயல்களுக்கு அக்காலத்தில் விதிக்கப்பட்ட தண்டனை இப்போது கடுமையானதாகவே காணப்படும். உதாரணமாக:— நன்னன் என்னும் அரசன் தன் அரண்மனையிலுள்ள மாம்பழ மொன்றைத் திருடிய ஒரு பெண்ணைக் கொலை புரிந்தான். அவன் பெயரும் பெண் கொலை புரிந்த நன்னன் என்று வழங்கப்படுகிறது. அக்காலத்தில் களவுக்குக் கடுந்தண்டனையே விதிக்கப் பட்டது. சிலப்பதிகாரத்திலும், கோவலன் அரசியின் காற் சிலம்பைத் திருடினதாகக் குற்றஞ் சாட்டப்பட் டன்றோ கொலை செய்யப் பட்டான். கோவலன் மனைவியாகிய கண்ணகி பாண்டியன் அவை முன் சென்று முறையிட்ட போது அரசனும் திருடனைக் கொலைசெய்தமை அநீதியன்று என்று தெரிவித்தான். இதனால் களவுக்கு அக்காலத்தில் ஏற்பட்ட தண்டனை திருடனைக் கொலை புரிதல் என்று புலனாகின்றது. வியபிசாரம் முதலிய தீய ஒழுக்கங்களுக்கும் கடுந்தண்டனையே யாம.

அக்காலத்து நீதியிற் சிறந்து விளங்கிய அரசர்களைப் பற்றி சில கூறுவாம:—

கரிகாற் சோழன்:— இவன் வயதிற் சிறியவனாயினும மதியிற் பெரியோனாயும், பட்சபாத மின்றி நீதி செலுத்துவதிற சமர்த்தனாயும் இருந்தான். இவன் ஒருவழக்கில நியாயஞ் சொல்ல வந்தது; அப்போது வழக்காளிகள் இவனது இளமையைய நோக்கி, தங்கள் வழக்கை வயதில் முதிர்ந்த நியாயாதிபதி ஒருவர் விசாரித்தலே ஏற்புடைத்தாகும் என்று குறிப்பானுணர்த்தினர். 'அவ்வண்ணமே யாகுக' என்று கரிகாலன் வாக்களித்த

னன். அவ்வழக்கை வேறொருநாள் வரையில் தள்ளிவைத்து அத்தினத்தில்தான் விருத்தவேடம்பூண்டு வந்து அவ்வழக்கைத் தானே தீர்த்தனன்.

பண்டைக் காலத்தில் அறிவிலும், அனுபோகத்திலும், கீர்த்தியிலும் மேம்பட்டவர்களே நீதிபதிகளாக நியோகிக்கப் பட்டார்களென்பது இதனால் அறியக் கிடக்கின்றது.

பொற்கைப் பாண்டியன்.—இவ்வரசன் ஒருநாள் இரவில் நகர்வலம் வரும்போது ஒருவீட்டின் திண்ணையில் இளைப்பாறநேர்ந்தது. அவ்வீட்டிலுள்ள பார்பானும், அவள் மனைவியும் பேசும் சத்தங்கேட்டது. அதைச் சிறிது இவ்வரசன் கவனித்தான். அப்பார்ப்பான் காசி யாத்திரைபோக பிரயாணப பட்டுக்கொண்டிருந்தான். அவனது பிரிவாற்றாமைக்கு வருந்திய மனைவிக்குத் தேறுதலாக அப்பார்ப்பான் "நமது அரசனாகிய பாண்டியன் உன்னைக் காப்பான். நீ பயப்படதே என்றான்" இதைச் செவியுற்ற பாண்டியன் அற்றைத்தின முதல் அப்பார்பானது வீட்டை முன்னையைவிட நன்கு பாதுகாத்து வந்தான். சிலநாள் கழிந்த பிறகு காசிக்குச் சென்ற பிராமணன் திரும்பிவந்துவிட்டான். அவன் திருமபி வந்தது பாண்டியனுக்குத தெரியாது. வழக்கம்போல் இரவில் நகர் வலம் வரும்போது அவ்வீட்டில் ஆண் குரல் கேட்டது உடனே அரசன் கதவைத் தட்டினான். கதவைத் தட்டினதும் காசிக்குச் சென்று திரும்பின பிராமணன் "யார்" என்றான். பாண்டியன்தான் அவசரப்பட்டுசெய்த காரியத்திற்காக வருந்தி அப்பார்ப் பனியின்மீது அவள் கணவனுக்குச் சந்தேகம் பிறவா வண்ணம் ஒன்று செய்யத் துணிந்து அத்தெருவிலுள்ள வீட்டின் கதவுகளை யெல்லாம் தட்டிக்கொண்டே சென்றான். மறுநாள் குடிகளெல்லாம் அரசன்முன்வந்து தங்கள் வீட்டின் கதவுகளை யெல்லாம் யாரோ குறும்புக்காக தட்டினதாக முறையிட்டார்கள். பாண்டியன் அமைச்சர்களை விளித்து அம்மாதிரி தட்டினவனுக்கு என்ன தண்டனை விதிக்கலாமென்று கேட்டான்; அவர்கள் அவனுடைய கையை வாங்கிவிடல் வேண்டுமென்றார்கள். உடனே பாண்டியன் தன்கையை வாளினால் துணித்தனன். பிறகு அவனுக்குக் கைவளர்ந்து வந்து பொன்போல் பிரகாசித்தது. இதனால் அவனுக்குப்பொற்கைப் பாண்டியன் என்னுங் காரணப் பெயர் உண்டாயிற்று.

எனக்குத் தகவன்றா லென்பதே நோக்கித்
தனக்குக் கரியாவான் றானாய்த் தவற்றை
நினைத்துத்தன் கைகுறைத்தான் றென்னவனுங் காணார்
என்செய்யார் மாணா வினை.

என்னும் பழமொழி இவர் சரிதத்தை வலியுறுத்தும்.

மனுநீதி கண்ட சோழர்:—

சால மறைத்தோம் பிசசான்றவர் கைகாப்பக்
காலை கழிந்ததன் பின்றையும்—மேலைக்
கறவைக் கன்றார்ந்தானைத் தந்தையு மூர்ந்தான்
முறைமைக்கு மூப்பின் மையில். (பழமொழி)

இவர் திருவாரூரில் அரசியற்றிய சோழராஜாக்களிலே சிறந்து விளங்கின மகா சிவபக்தர். இவருடைய ஒரே புதல்வன் தேரிலேறி வீதியிற் செல்லும்போது ஒரு பசுக்கன்று துள்ளிக்கொண்டுபோய் அத்தேர்க்காலின் அடியில் அகப்பட்டிறந்தது. கன்றையிழந்த பசுமிக்க துயரத்துடன் சென்று இராசமாளிகை வாயிலிற் கட்டிய ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் அடித்தது. அச்சப்தத்தைக் கேட்ட சோழராஜா மிகப்பதைப்புடன் தன் மந்திரி மார்களை விளித்து நடந்தது யாதென வினவினார். அப்போது அவர்கள் நிகழ்ந்ததை விளக்கி, கோவதைக்குத் தரும நூல்களில் விதிக்கப்பட்ட பிராயச்சித்தத்தைச் செய்வதே தருமம் என்றார்கள்.

மாநிலங் காவலனாவான் மன்னுயிர் காக்குங் காலைத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரானுயிர் தம்மால்
ஆனபயமைந்துந் தீர்த்தறங் காப்பானல்லனோ.

என்னும் இலக்கணங்கள் அமையப் பெற்றவனன்றோ அரசனெனப் படுவான். ஆதலால் இப்பசு, தன்னை யிழந்து துயறுருதல் போல நானும் என் புத்திரனை இழந்து துயருறுதலே என்று சொல்லி தமது புத்திரனைக் கீழேகிடத்தி தேரை நடத்தினார் இவர் தம்முடைய குலத்துக்கு ஒரு புதல்வனே உளன் என்பதைச் சிந்தித்தா ரல்லர். தருமவழி நடத்தல் என்னும் ஒன்றையே பெரிதும் கவனித்தார். இவரது செயற்கருஞ் செய்கையைக் கண்டு தியாகேசர் இடபவாகனமேற்கொண்டு எழுந்தருளிவந்து மநுநீதிகண்ட சோழருக்குத்திரு

வருள் புரிந்தார். இச்சரிதத்தின் வரவை பெரிய புராணத்திற் பரக்கக் காணலாம், கீழ்க்குறித்த பெரிய புராணத் திருவருட் பாக்கள் நோக்கற் பாலன:—

ஒருமைந்தன் தன்குலத்துக்குள்ளா னென்பது முணரான்
தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் தேராழியுற வூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி யரிதோ மற்றெளிதோ தான்.

தண்ணளி வெண்குடை வேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கள் மழைபொழிந்தார் வானவர் பூமழைசொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே யணிவீதிமழ விடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங்கப் பெருமான்.

சடைமருங்கிலிளம் பிறையுந் தனிவிழிக்குந் திருநுதலும்
இடமருங்கி லுமையாளும் எம்மருங்கும் பூதகணம்
புடைநெருங்கும் பெருமையுமுன் கண்டரசன் போற்றிசைப்ப
விடைமருவும் பெருமானும் விறல்வேந்தற் கருள்கொடுத்தான்.

அந்நிலையே யுயிர்பிரிந்த ஆன்கன்று மவ்வரசன்
மன்னுரிமைத் தனிக்கன்று மந்திரியு முடனெழலும்
இன்னபரி சானனென் றறிந்திலன் வேந்தனும் யார்க்கு
முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ.

இந்தியத் தொழிலபிவிருத்தி கமிஷனர்கள் தங்களுடைய அலுவல் முடிந்து ரிபோர்ட்டை அச்சுக்குக் கொடுத்து விட்டார்கள்.

நேற்று முன் தினம் மாலை 4-மணி சுமாருக்கு லக்ஷ்மண புரியில் நிதானமான உக்ரத்துடன் ஒரு பூகம்பம் நேர்ந்ததாக அறிவிக்கப்படுகிறது.

கல்கத்தாவில் கடந்த சில தினங்களாக ஒருபுதிய ஜுரம் ஜனங்களை வரட்டி வருகிறது. தந்தி ஆபீசில் பாதி பேருக்கு மேல்குமஸ்தாக்கள் வரவில்லையாம். பம்பாயிலும் சென்னையி லும் கூட வாட்டுகிறது.

ராஜப்பிரதிநிதி லார்ட் செம்ஸ் போர்ட் அடுத்தாற்போல் சுற்றுப் பிரயாணம் போகும்போது போபால், இண்டோர், ஆகிய சமஸ்தானங்களுக்கு விஜயம் செய்வாரென்று தெரிகிறது.

சூரியன்

(250-வது பக்கத்தொடர்ச்சி)

பூமி பிரதக்ஷிண காலத்தில் சந்திரன் பூமிக்கும் சூரியனுக்கும் மத்தியில் போகும் அமாவாசைதினம் பகலில் சூரியனுக்கு நேரில் குறுக்கே நேர்ந்து சூரியவெளிச்சம் பூமியிலடிக்காமல் சில மணிநேரம் மறைக்க ஏது உண்டாகும். அதற்கு சூரியகிரகணமென்று பெயர். அதுபோலவே பௌர்ணமி தினம் பூமி சூரியனுக்கும் சந்திரனுக்கும் மத்தியிலிருக்குங் காலத்தில் ராத்திரியில் சந்திரன்மேல் சூரியகாந்தி படாவிட்டால் பூமியைமறைப்பதனால் சந்திரன் சில மணிநேரம் நேரில் பூமிக்கு வெளிச்சங் கொடுக்காமல் மங்கிப்போகும். அதற்கு சந்திர கிரஹணமென்று பெயர்.

சந்திரன் பூமியைச்சுற்றி ஓடும்போது அது சூரியனுக்கும் பூமிக்கும் இடையிலாவது அல்லது அதற்கு எதிர்த்த நேர்திசையிலாவது வரும்படி நேரிடுகிறது. இப்படி வரும்போது சூரியன், பூமி, சந்திரன் இம்மூன்றும் ஒரே ஒழுங்கில் அதாவது இம்மூன்றின்மையங்களும் ஒரே நேர்கோட்டிலிருக்கும்படியாக வருமானல், அப்போது ஒன்றின் நிழல் மற்றொன்றில் விழும் அதைத்தான் கிரகணம் என்று சொல்லுகிறோம். ஆனால் ஒவ்வொரு அமாவாசியையிலும், பௌர்ணமியிலும், கிரகணம் உண்டாவதில்லை. ஏனெனில் சந்திரன்பாதையின் மட்டம் பூமிபாதையின் மட்டத்திற்குச் சற்று சாய்ந்திருக்கிறது.

சந்திரனுடைய நிழல் பூமியின்மேல் விழுகிறதனால் பூமியில் எந்த விடத்தில் அம்மாதிரி அமாவாசை தினம் சந்திரனுடைய நிழல் படுகிறதோ அந்தப் பிரதேசத்தில் சூரிய கிரகணக்காட்சி நேருகிறது. சந்திரன் முழுதிலும் படும்போது பூர்ணகிரகணமும் சில பாகத்தில் மட்டும் படுமிடத்தில் முறையே, முக்கால், அரை, கால், முக்காலே அரைக்கால், அரையே அரைக்கால், மூன்றுவீசம், அரைக்கால் இவ்வாறு சூரிய பிம்பம் மறையும் அளவை அனுசரித்துக் கிரகணம் கணக்கிட்டுக் கூறப்படும்.

மேல் விவரித்தபடி பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் சந்திரன் வந்து அது பூமிக்குக்கிட்ட இருக்கும்போது இச் சந்திரனுடைய நிழல் பூமியின்மீது விழுகிறது. அப்போது அச் சூரியகிரகண முண்டாகிறது. சூரிய கிரகணத்தைக் காட்டும்

பாகத்தில் சந்திரன் நிழல் மொக்குள் வடிவம் பெற்றிருப்பதை யும், அதை ஒட்டி மெலிந்த நிழல் இருப்பதையும் பார்க்கிறோம் பூமியில் ஷை கறுத்த நிழல் விழும் பாகம் சிறுவட்டமாகவும், மெலிந்த நிழல் விழும்பாகம் பெருவட்டமாகவும் இருக்கும். சிறு வட்டத்திலிருப்போர்மீது சூரியகாந்தி சற்றேனும்படாது. இவர்களுக்கு இப்போது பூர்ண சூரியகிரகணம் ஆகும். மெலிந் தநிழலில் இருப்பவர்கள் சூரியனின் ஒரு பாகத்தைப் பார்க்கக் கூடும். இதை பார்சவ சூரியகிரகணம் என்கிறோம். மற்றப்பாக ங்கள் சந்திரனால் மறைபட்டிருக்கும்.

சந்திரன் தன் நிழலினால் சூரியபிம்பத்தின் முழுமையையும் மறைக்கக் கூடாதபோது அது பூமியிலிருந்து அதிக தொலையிலி ருக்கும் காலத்தில் சூரியபிம்பம் மத்தியபாகத்தைமட்டும் மறை க்க ஏது உண்டாகும். அதாவது சூரிய பிம்பத்தின் ஓரக்காலில் மட்டும் சூரியகாந்தி அடிக்கும், அதன் மத்தியில் சந்திராகிருதி அளவுக்கு இருண்டு மறையும் சூரியனைச் சுற்றிலுமுள்ள வெளிச் சம் ஜோதிர்மயமானம் அல்லது வளைபோல மோதிரவடிவாகத் தோன்றுமாகையால் அதற்குக் கங்கணக்கிரகணமென்றுபெயர் வழங்குகிறது.

இராத்திரி காலத்தில் நம்முடைய வீட்டில் ஓர் அறையில் விளக்கு வைத்துக்கொண்டிருந்தால் அவ்விளக்கு அந்த அறை முழுவதுக்கும் வெளிச்சம் கொடுக்கிறதல்லவா? விளக்குத்தெ ரியாது தன்கையினாலேயே விளக்கை மறைத்துக் கொண்டா லும் விளக்கு மறைந்து போகுமன்றோ? அதுபோலவே சூரிய னுக்கும் நமக்கும் மத்தியில் சந்திரன் பூமி பிரதக்ஷிணகாலத்தில் குறுக்கிடச் சூரிய வெளிச்சம் மறைந்து போகிறது. ஆனால், சந்திரன் ஓர் வெள்ளிப் பந்தைப்போலவும் பெரிய ரஸகுடுக்கை யைப் போலவும் பிரகாசமாயிருக்க ஒரு பிரகாசவஸ்து மற் றொரு பிரகாச வஸ்துவின் வெளிச்சத்தை எப்படி மறைக்கக் கூடுமென்றால் அதை வெகு சுலபமாக அறியலாம். விளக்கினால் பிரகாசிக்கிற அறையிலிருக்கும் மனிதன் தனக்கும் விளக்குக் கும் மத்தியில் ரஸகுடுக்கை அல்லது வெள்ளிப் பந்தைப்பிடித் துக்கொண்டால் விளக்குப்பக்கத்தின் முன்பாகமட்டில் வெளி ச்சமாக இருக்கும்; மனிதன் பக்கம் உள்ளபாகம் இருண்டு கரு த்துப்போகும். அதுபோல ஸ்வயம் பிரகாசமின்றிச் சூரிக்காந் தியினால் அன்றிப் பிரகாசிக்கக்கூடாத சந்திரனுடைய வெளிச்

சம் படாத இருண்ட பக்கமல்லவா சூரியனுக்கும் நமக்கும் மத்தியிலிருந்து சூரியனை மறைக்குங் காலத்தில் நமக்குத் தெரிகிறது. ஆனால் சந்திரன் ஸ்படிகக் கண்ணாடியைப் போலத் தெளிவாக ஒளி யூடுருவத்தக்க தன்மை (Transparancy) யுள்ளதாயின் கண்ணாடி வழியாகத்தெரியும் விளக்கு வெளிச்சம்போலச் சூரியவெளிச்சம் தெரியும், அப்படிக்கின்றிக்கிரகணம் ஒளிசெல்லக்கூடாத (Opague) இருளானகெட்டி பதார்த்தமானதால் சந்திரன் வழியாக சூரியகிரகணம் புகுந்து இப்புறம் தோன்ற அவகாசமின்றி மறைந்துபொவதினால் சூரியகிரகண முண்டாகிறது. கிரகணங்கள் தற்செயலாய் சம்பவிக்கின்றன வென்று எண்ணுதல் சரியன்று. பகல், இரவு, பௌரணமி, அமாவாசியை, மற்ற பருவவித்தியாசங்கள் யாவும் எவ்வாறு வருஷாவருஷம் ஒரு ஒழுங்குப்படி சம்பவிக்கின்றனவோ அவ்வாறே கிரகணங்களும் சுமார் 120 வருஷகால் வரையிலும் ஓர் ஒழுங்குப்படிசம்பவித்துக்கொண்டு வருகின்றனவென்பது உண்மை.

முடிவுரை

என் அருமையான சகோதரர்களே! யான் எனது சிற்றறிவிற் கெட்டியவரை "சூரியன்" என்ற பெரியவிஷயத்தைப்பற்றி எழுதத்துணிந்து ஒருவாறு பூர்த்தியாக்கினேன். அன்னப்பட்சியானது பாலிலுள்ள நீரைப் பிரித்து எப்படிப் பாலைமட்டும்அருந்துமோ அதுபோல் இவ்வியாசத்தின்கண் காணப்படும் குற்றங்களனைத்தையும், "குற்றங்களைந்து, குணமணைந்துகொள்வதே கற்றறி மாந்தர்கடனாம்" என்றதற்கிணங்க, மன்னித்துவிட்டு குணத்தை மாத்திரம் கிரகித்துக்கொள்ளத் தாழ்மையாய்க்கேட்டுக்கொள்ளுகிறேன். நேயர்களே! என்மதலை மொழியால் யாவர்க்கும் இன்றியமையாததான இவ்விஷயத்தைப்பற்றி சுருக்கமாய்க் கூறியுள்ளேன். கற்றுணர்ந்த ஆன்றோர் இது பிறர்குழவி கூறியதெனக் கருதாது தம் குழவியின் மொழியென மதித்துக் குணத்தைக் கொள்ளும்படி வேண்டுகிறேன்.

"கலாசிந்தாமணி" யாகிய இக்கற்பகவிருக்ஷத்தை இவ்வுலகெங்கும் பரவச்செய்து யாவருஞ் சிறப்புறத்தும்படி கற்றுணர்ந்த கனவான்கள் நன்முயற்சி எடுத்துக்கொள்ள எல்லாம் வல்ல இறைவனும் சகல ஜீவ தயாபரனுமான ஜகதீசன் தண்ணருள் பாலிப்பாராக.

கோ. அரங்கசாமி அய்யங்கார்,
ஸ்கூல் மாஸ்டர், செம்போடை.

நாம் ஒழுகவேண்டிய நெறிகள்

(261-ம் பக்கம் தொடர்ச்சி)

ஓர் எளியவன் தனக்கு நாளைக்கே அதிகசெல்வம் வேண்டுமென்று எண்ணி முயற்சி செய்வது அபத்தம் என்று காண்பான். ஒருவேளை அச்செல்வம் அவனுக்குத் தற்செயலாய்த் தெய்வ சங்கற்பத்தாற் கிடைக்கினும் கிடைக்கலாமேயொழிய அதைத் தன் செய்கையால், நினைத்தவன்றே யடையமுடியாது. திருட்டுத் தொழிலிற் பிரவேசித்துப் பொருள் பற்று வானாகில் இராஜதண்டனைக் குட்படுவது மன்றி இகத்தில் தீராப்பழிக்கும் பரத்தில் அழியா நரகத்திற்கும் ஆளாகிறான்.

அம்மாதிரியே, நீதி நெறிகளும் தெய்வத்தி னருளால் நம்மைச் சாரட்டுமே, நாம் ஏன் மனதைப் புண் படுத்திக்கொள்ள வேண்டுமென்றாலோ, பலநாள் பழகியே நாம் இவைகளைக்கைக்கொள்ள வேண்டியதா யிருத்தலின், திடீரென்று நமக்குவாய்க்கு மென்று எண்ணுவது பிசகேயாகும். இவைகளை,

"நந்தெறும்பு தூங்கணம் புட்காக்கை யென்றிவைபோற்
றங்கருமம நல்லகடைப் பிடித்துத் தங்கருமம
மப்பெற்றியாக முயல்பவர்க் காசார
மெப்பற்றியானு ம் படும்" (ஆசாரக் கோவை)

என்னும் நீதிப்படி விடா முயற்சியா லடைவது அசாத்தியமு மல்ல, அரியது மல்ல. ஆனால் நாயனார் ஏன் அப்படிக்கூறினார்? இதற்கும் அவர் வாக்குக்கும் தொந்த முண்டாகின்றதேயெனின், விடாமுயற்சியுடையார் வாய்க்கு வந்ததை யெல்லாம் சொல்லாமல், தம்மால் கூடுமானவைகளை மாத்திரம் செய்கையால் வெளிப்படுத்துவார்க ளாகையால், அவர் முயற்சியுடையாரைச் சுடாமல், முயற்சியில்லாதாரையும் தங்களாற்கூடாதது ஒன்றுமில்லை யென்றும், இன்னின்ன மாதிரி ஒவ்வொன்றையுஞ் செய்யப் போகிறோம். என்றும் வீணே வாயால் பிதற்றி சோம்பேறிகளாய்த் திரிபவர்களையும் 'சொல்லுவது யாருக்கும் எளியது, அவைகளைச் செய்வது தான் அரிது', இனிமேல் அப்படிச் சொல்லி பொய்ய ரென்று பெயரெடுக்காதீர்கள்' என்று சொன்னாரே யல்லது வேறில்லை. அவரே குறளில், ஆள்வினை யுடைமை என்னு மதிகாரத்தில்,

"முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை
யின்மை புகுத்து விடும்" என்றும் கூறியுள்ளார்

ஆகையால், முற்கூறிய நீதிநெறிகளைக் கையாட முயற்சி இன்றி மையாததால், இதையும் ஓர்நீதியாகவே நாம் கொண்டு விடாது கைப்பற்றல் வேண்டும்.

பெரியாரைப் பிழையாமை.

இவ்வளவு தூரம் நமக்குச் சொல்லவும் கேட்கவும், புத்தி புகட்டவும் காரணமாயிருப்பவர் யார் என்று உற்று நோக்குங்கால், அவர் தமக்குவமையில்லாப் பெருமானே யாவர். அப்பெரியார் தம்மை யெய்தப் பெற்றாரின் மூலமாய் உலகப்பற்றுகளைக்கொண்ட ஆன்மாக்களுக்கு உபயோகமாம் பொருட்டு அநேக சங்கற்பங்களைக் கற்பிக்கின்றார். மூலகாரணமா யிருப்பவரே பெரியாராயினும், நமக்கு அறிவுறுத்த வருபவர்களும் நமக்கு மேலாரே யாவர். இவர்கள் பற்பல நீதிகளை யியற்றி நமக்குப் பயனளிக்கின்றனர். இவர்களைப் பிழை செய்வது அப்பெரியாரைப் பிழை செய்வதை யொக்கும் ஆகவே, இவர்கள் விலக்குகளை விட்டு விதிகளை விடாமல் தழுவுவதே பெரியாரைப் பிழையாமையாகும். முற்கூறிய நீதிகளெல்லாம் இவர்கள் வரம்பை அனுசரித்திருக்கின்றன வாகையால் அவைகளைக் கொள்வது பிழையாமையும் விடுவது பிழையுமாம்.

இத்தகைமையரே இன்னொரு சிறு நீதியையுங் கற்பிக்கின்றனர். நமது பெற்றோர் ஒருக்கால் அறிவில் இளையவரேனும் வயதில் முதியவராகையால், 'அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்' என்றும், 'தந்தை தாய்ப்பேண்' என்றும் கட்டுறையிட்டுள்ளார். இரண்டாவது வாக்கியத்தை எடுத்துக்கொண்டால் முதலிற் கூறியதின் தன்மையைச் சீக்கிரத்தில் முடித்து விடலாமாகையால் அதைப் பற்றிச் சிறிது கூறுவாம்.

நற்குண நற்செய்கைகளிலொன்றாகிய 'தந்தை தாய்ப் பேண்' என்ற நமது மூதாபிராட்டியாரின் வாக்கைச்சிறிது ஆராயுங்கால், இக்காலத்திற்சிலரும் மற்றாரும் தங்கடங்கள் பெற்றோர்களிடத்தில் நடந்து கொள்வதின்னதென்றினிது விளங்கும். தாய் தந்தையரோ,

"துப்பார்க்குத் துப்பாயதுப்பாக் கித்துப்பார்க்குத்
துப்பாயதூஉ மழை" என்னும் பெருமை யுடைய

மழைபோல தங்குழந்தைகளைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்து அவர்களின் துன்பங்களைத் தாங்களு மனுபவிக்கின்றனர். திடீரென்று குழந்தைக்குச் சுரம் வரின் அவர்கள் அல்லலுற்று அவ

திப்படுவது இவ்வள வவ்வள வன்று. இத்தன்மையினரை நாம் பேணுதிருப்பது பெரும்பாதகமே. மக்கள் வளர்ந்தபின், தங்களுக்குத் தாய் தந்தையர் ஒன்றும் செய்யாவிடினும் அவர்களைப் பேண வேண்டியிருக்க, அவர்களால் அளவில்லா நன்மையடைந்தும், அவர்களைக் கண்டால் வெறுத்துச் சண்டை சச்சரவுகளுண்டு பண்ணித் தங்குமரன் பேசாதிருத்தலே பேறுதவி செய்ததை யொக்குமென எண்ணச்செய்வது மிருகத் தன்மையினு மிழிந்ததே. தாங்கள் சிறிதும் கஷ்ட நஷ்டங்கள்காணுதிருக்கும்பொழுதே பெற்றோர் வாசம்படின் புறங்காட்டி யோடும் அறிவிலிகள், இடுக்கண் வந்த காலையிற்றான் உதவுவரோ? ஒருக்காலும் இல்லை. தற்காலத்தின் தன்மைக்கும் இதற்கும் வேறுபாடு இல்லை யென்று சொன்னாலும் தகும்.

இங்ஙன மிருக்கும் பொழுது அன்னையையும் பிதாவையும் தெய்வமாகப் பாவிப்ப தெங்கே? குருவும் பெரியாரே பாவர். மாணவர்கள் இவர்களிடத்தி லிருக்குந தன்மையையோ இப பொழுது சொல்ல வேண்டுவதில்லை. தெய்வமே யில்லை யென்று ஒரே பிடியாய்ச் சாதிக்கும் நாஸ்திகமதத்தினரும் இருக்கின்றனர். இவர்களெல்லாம் பெரியாரைப் பிழை செய்தவரே யாவர்

ஆதலால், தந்தை சுகமடையத் தன்னின்பத்தை யறவே யொழித்து பிரமச்சாரி வேடங்கொண்ட பீஷ்மரையும், சிலையையே குருவெனக் கொண்டு புகழ்பெற்ற ஏகலைவனையும், தெய்வத்தின் பேரிலேயே சிந்தையைச் செலுத்தி நன்கு விளங்கிய பிரகலாதனையும் பின்பற்றுவ தன்றி,

"ஒழுக்கம் விழுப்பந்தர லானொழுக்க
முயிரினு மோம்பப் படும்" என்று குறளாசிரியர் கூறியிருப்பதாலும், அறிவுடையோர் தங்களுடைய நிதநியகருமங்களைச் செய்து முடிப்பதற்கு ஏற்பட்டுள்ள பகற்காலம் போதவில்லையே யென்று இராக்காலத்தையும் நித்திரைக்குட் படுத்தாம லிருக்கின்றமையாலும, "நீதிநெறி விலகல் இன்ப நெறிவிலகல்" என்பர்.

இளைஞரும மாலைதில் உணரத்தக்க தெள்ளிய நீதிமொழியைவேத மொழியாகக் கொண்டு, ஆன்றோர்கள் ஆக்ஞாபித்த வண்ணம் துர்வினைகளைப் பற்றறப் பறக்கடித்து, அரியநீதிமொழிகளை கசடறக் கற்றுணர்ந்து அவைகளின்படி நடந்து இம்மை மறுமைப் பயனைப் பெறுவதே நம் கடன்

கே-ஆர் கணபதி பிள்ளை,
குணியமுத்தூர்.

கடையெழு வள்ளல் வரலாறு

(259-ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றாவது வன்பரணர்:—

மயிலுக்கிரங்கிப் போர்வையளித்த பெருங்கருணையுடைய பேக! யாம் இப்போது பசித்து நின்பால் வரவில்லை; எம்மாற் றாங்கப்படவேண்டிய சுற்றமும் இப்போது இல்லை. பேரருளாள! நீ அறநெறியில் ஒழுகவேண்டுமென்பதேயாம் இரக்கும் பரிசில்; ஆதலால் நீ உன்தேரில் ஏறிச்சென்று பார்ப்பதற்கரிய துக்கத தைக்கொண்ட உன் கற்புடைய மனைவியின் சிந்தாகுலத்தைத் தீர்ப்பாயாக என்னுங்கருத்துத்தோன்ற:—

"மடத்தகைமாமயில் பனிக்குமென் றருளிப்
படாஅமீத்த கெடாஅநல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக!
பசித்தும் வாரேம் பாரமு மிலமே
களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்
நயம்புரிந் துறையுநர் நடுங்கப் பண்ணி
யறஞ்செய் தீமோ வருள்வெய் யோயென
விஃதியா மிரந்த பரிசிலஃ திருளி
னினமணி நெடுந்தே ரேறி
யின்னா துறைவி யரும்படர் களைமே" (புறம் 145)

எனப்பாடினர்.

நான்காவது அரிசில் கிழார்:—

பகைவரைப் புறங்காணும் வலிமை மிக்க எமது தலைவ! நீ ஏதோ பொன்னாபரணங்களும், பிறவும் வெறுக்க நல்கி எம்மை வழியனுப்புவோமென்று எண்ணுகின்றனை. அந்நினைவினை தவிர்தல் வேண்டும். பண்ணமைதிப்பட யாழ்கொண்டு நினது நன்னாடு பாடியதற்கு எமக்கேதேனும் பரிசில் தரவேண்டுமென்பதில் உனக்கு விருப்பமுளதாயின், ஒன்றுதான் உன்பால்யாம் பெறக்கூடியது; அதுதான் யாதெனில், நீ அருள் பண்ணுமையால் அருந்துயருழக்கும் உன்மனைவியின் கூந்தலானது திரும்பவுந் தூபங்கமழ்ந்து நறுமலர் மாலைசூடும்படியாக உனது குதிரைகள் உனது உயர்ந்த தேறிற் பூட்டப்பட வேண்டுமென்பதே என்னுங் கருத்துத் தோன்ற:—

"அன்ன வாகநின் னருங்கல வெறுக்கை
யவைபெறல் வேண்டேஎ மடுபோர்ப் பேக
சீறியாழ் செவ்வழி பண்ணிநின் வன்புல
நன்னாடு பாட வென்னை நயந்து
பரிசி னல்குவை யாயின் குரிசினீ

நல்கா மையி னைவரச் சாஅ
யருந்துய ருழக்குநின் றிருந்திழை யரிவை
கலிமயிற் கலாவங் கால்குவித் தன்ன
வொலிமென் கூந்தற் கமழ்புகை கொளீஇத்
தண்கமழ் கோதை புனைய
வண்பரி நெடுந்தேர் பூண்கநின் மாவே.'' (புறம்-146)

என வெகு நயமாகப் பாடினர்

ஐந்தாவது பெருங்குன்றூர்க்கிழார்:—

ஆவியர் பெரும! கல்முழைகளினின்றும்விழும் அருவிகளை யுடைய பலமலைகளையும் மிக்க சிரமப்பட்டுக் கடந்து வந்து உனது நாட்டைப் புகழ்ந்து பாடியதற்கு நீ நல்கவேண்டிய பரிசில் ஒன்றுதான்; அஃதியாதோ வெனின், உன்மூலமாய்த் துன்புற்று பெரிதும் இரங்கிவாடும், உனது மனைவியினது நெய்ப்பறந்த கூந்தலானது கடைசற் பிடித்த நீலமணிபோல ஒளிவிட்டுப்புதுப்பூவோடு விளங்கும்வண்ணம்அவள்பால் செலுதற்குஎன்னோடு நீஇன்றே வரவேண்டு மென்பதே.என்னுங் கருத்துத்தோன்ற:-

''கன்முழை யருவிப் பன்மலை நீந்திச்
சீறியாழ் செவ்வழி பண்ணி வந்ததைக்
கார்வா னின்னுறை தமியள் கேளா
நெருந லொருசிறைப் புலம்புகொண் டுறையு
மரிமதர் மழைக்க ணம்மா வரிவை
நெய்யொடு துறந்த மையிருங் கூந்தன்
மண்ணுறு மணியின் மாசற மண்ணிப்
புதுமலர் கஞல வின்று பெயரி
னதுமனெம் பரிசி லாவியர் கோவே'' (புறம்-147)

என வெகு உருக்கமாகப் பாடினர்.

இங்ஙனம் அரும்பெரும் புலமையும், ஒழுக்க நலமுஞ் சான்ற ஐம்பெரும்புலவர்கள் கூறிய கருத்துக்களையும், அமுத வசனங்களையும் புறக்கணித்தற்கு இயலாதவனுய்த் தனது அறியாமையாற் கொண்ட புன்செயலை அறவே வெறுத்துப் புலவர்கள் விரும்பியவாறு அவர்களுடன் அப்பொழுதே புறப்பட்டுத் தனது கற்புடை மனைவிபக்கலிற் சேர்ந்து அவளை மகிழ்வித்தான் என்ப.

இங்ஙனம் அன்பும், அருளும் நிரம்பி ஐயறி வுயிர்களிடத்தும் அநுதாபமோங்க மாசறு குணத்தனுய் வள்ளன்மை மிக்க பேகனது விளங்கு புகழை விரிக்குந்தோறும் பெருகுமாதல்பற்றி இத்தோடு நிறுத்திப்பாரிவள்ளலின் வரலாற்றைக் கூறுவாம்.

(தொடரும்) சி-கு. நாராயணசாமி முதலியார்.

கோயமுத்தூர்.

வறுமையும் வேண்டுவதே

"எய்த்தே னுயேனினியிங்கிருக்க கில்லேனிவ் வாழ்க்கை
வைத்தாய் வாங்காய் வானோரறியா மலர்ச்சேவடியானே."

ஆன்மாக்க ளெல்லாம் இன்பத்தை அவாவித் துன்பத்தை வெறுப்பது இயல்பாகும்.

"கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்
கொடிது கொடிது வறுமை கொடிது." என்றார் ஔவைப் பிராட்டியார்.

திருவள்ளுவநாயனார்,

"இன்மையி னின்னாத தியாதெனி னின்மையி
னின்மையே யின்னா தது." என்றார்.

(இதன் பொருள்.) ஒருவனுக்கு வறுமைபோல இன்னாதது யாதென்று வினவின், வறுமைபோல இன்னாதது வறுமையே, பிறிதில்லை. (எ-று.)

பரிமேலழகரும் வறுமைக்கு ஒப்பதில்லை யெனவே, மிக்க தின்மை சொல்ல வேண்டாவாயிற்று என்றார்.

உயிர்க்குணம் வறுமையை வெறுத்து வளம்பட வேண்டிய தாயிருக்க, 'வறுமையும் வேண்டுவதே' என்று எழுதுவது விபரீதமாமெனச் சிலரெண்ணவுங்கூடும். வறுமையும்என்னும் இழிவுசிறப்பும்மையால், செல்வமே எஞ்ஞான்றும் வேண்டியதென்றும், வறுமையும் ஒரோவழிச் சில நன்மைகள் காரணமாக வேண்டப்படுவதென்பதும்இவ்வியாசத்தின்கருத்தெனவுணர்க.

வறுமையால் நன்மையுண்டோ வெனின், அறியாது கூறினாய். வறுமையிலுங் கொடியது பிறிதொன்றில்லை யென்று கூறியநாயனாரே, ஓரிடத்தில், "கேட்டினு முண்டோருறுதி." என்றார். கடவுள் நல்லவர்களுக்கும் பொல்லாதவர்களுக்கும் வறுமையைத் தருவது இருபாலாரினுங் கொண்ட கருணை காரணமாகவே. இனி, வருமைவேண்டுமிடங்கள் சிலவற்றைக் காட்டுதும்.

(1) செல்வமுள்ளா னொருவனுக்கு வந்து வாய்த்தவளாகிய மனையாட்டி, மாண்டகுணத்தொடு மக்கட்பேறில்லாது, இல்வாழ்க்கையைப் பொல்லாதவழியாய் நடத்திக், கொண்டகணவன் வேண்டிய வண்ணம் உத்தமநெறி நடவாத மெத்தப் புத்திகெட்டபட்டியேயாயினும், கணவன் அவளை விட்டு நீங்குவது இலகுவில் முடியாத காரியமாகையால், இந்நிலையில் அவனுக்குக் கடவுள் தாங்கொணு வறுமையைக் கொடுப்பாராயின், வந்

வறுமையை அவன் பிரயோஜனப் படுத்தாது விடுவானே? இவ்விடத்து வறுமைவேண்டுவதேயன்றே? வேண்டாதுவிடுவனேல்,

"மாண்டகுணத்தொடு மக்கட்பே றில்லெனினும்
பூண்டான்கழித்தற் கருமையால்—பூண்ட
மிடியென்னுங் காரணத்தின் மேன்முறைக்கண்ணே
கடியென்றார் கற்றறிந்தார்." என்பதை உணராது மனித குணத்தை விட்டமிருகமே யாவன்.

(2) மனைமாட்சியுடையளாய்க் கொண்டானிற்சிறந்ததெய்வமில்லையென்று வழிபடும் கற்பிற் சிறந்த உத்தம மனைவி, தனிமனையிருக்க அவளைவிட்டு, 'ஆமாபோல்நக்கி அவர்பொருள்கொண்டு சேமாபோல் குப்புறூஉ (இடபம்போலக்குதித்தோடு) ம்' பொல்லாத பரத்தையின் இல்லிலிருந்து தொழுநோய்பெற்று, தன் பொருளெல்லாந் தொலைத்து, இனியவள் என்றெண்ணியிருந்த வேசையால் முனிந்து துரத்தப்பட்டு, வாட்டமுடன் வீட்டுக்கு வரும் விடபுருடனானவன், தான் தேடிய வறுமையினால் புத்திபெற்று, தன்காதலிபால் பற்றுவைத்துநன்னெறியில் நடக்க முயல்வான். ஆகையால் இக்குணமுடையவனைநல்வழிப்படுத்துவதற்கு வறுமையிற் சிறந்த வழியொன் றுண்டோ? சொல்லுமின்.

(3) சிலருக்குச் செல்வமென்றொரு நோயுண்டு. இச்செல்வமாகிய நோயானது, நீடித்த காலத்திற்கு ஒருமனிதனைப்பிடிக்குமாயின், பாவம் அம்மனிதன் என்னசெய்வான்?

"கண்ணுளார் குருடராவார் காதுளார் செவிடராவார்."
என்றபடி, கண்தெரியாமல் காதுகேளாமற் செய்துவிடும். இந்நோய்க்குச் சிகிச்சை வைத்தியசாத்திரத்திலில்லை. ஆனால் ஒரு மருந்து கடவுள் உண்டுபண்ணி யிருக்கிறார். அது பின்வரும் வெண்பாவால் அறியலாம்.

"பெருத்திடு செல்வமாம் பிணிவந்துற்றிடில்
உருத்தெரியாமலே ஒளிமழுங்கிடும்;
மருத்துளதோவெனில் ? வாகடத்திலிலை;
தரித்திர மென்னுமோர் மருந்திற்றீருமே."

வறுமைவர மெல்ல அகங்காரம் நழுவிவிடும்; இரக்கமென்னும் இனியகுணம் தலைகாட்டும்; கடவுளிடத்துப் பத்தியுண்டாகும். ஆகையால், மனிதனை நல்வழிப்படுத்துவதற்கு வறுமையும் வேண்டுவதே.

பொ. நடராஜன்.
மேலைப்புலோலி.

இந்துமதச் சீர்திருத்தம்

(281-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு மேலே கூறப்பட்ட காரியங்களை மடாதிபதிகள் சரிவரநடத்தி வராததற்குக் காரணம், அவர்களைக் கேட்பதற்கு ஒருவரும் இல்லாமையே. மதம் எல்லாருக்கும் பொதுவானதால் அதின் சம்பந்தமான காரியங்கள் சரிவர நடந்து வரவேண்டு மென்பது, எல்லாருக்கும் கவலையிருக்க வேண்டுமென்பது அவசியமே. இவ்வாறு வழுவின்றி எல்லாக்காரியங்களும் நடந்து வரும்பொருட்டே நமது பண்டைய அரசர்கள் ஏராளமான நிலங்களைக் கொடுத்தார்கள்.

ஆகையால், தற்காலகோவிலதிகாரிகள் நியமிக்கப்படும்வழக்கம்முற்றிலும் தள்ளப்படவேண்டும். இங்கிலீஷ்காரர்களின்கோயிலுள் தலைமைப்பாதிரியும் அவரின்கீழ் படிபடியாய், அநேக பாதரிகளிருப்பதுபோல; நமக்கும் முக்கிய மடாதிபதி ஒருவரும், அவரின்கீழ் தரவாரியாய் அநேகரிருக்கவேண்டும். மடாதிபதி முதலிய பதவிகளுக்கு நியமிககப்படுகிறவர்கள், அப்பதவிகளுக்குரிய நற்குண நற்செய்கைகளும், கல்வித்திறமையும், சாஸ்திர ஆராய்ச்சியும், கடமையைச் சரிவரசெய்யும் தன்மையும் பொருந்தினவர்களா யிருக்கவேண்டும். ஒரு பட்டணத்துக்கு, முனிசிபல் சேர்மன் எப்படி ஜனங்களின் அபிப்பிராயப்படி, நியமிக்கப்படுகிறாரோ அப்படியே, எல்லா ஸ்தலங்களின்கோவிலதிகாரிகளும், அத்தலங்களிலுள்ள ஜனங்கள் சம்மதப்படியே நியமிக்கப்பட வேண்டும். முக்கிய மடாதிபதி, எல்லா ஸ்தலங்களுக்கும் வருஷத்துக் கோர்தரமாவது சென்று அங்கு எல்லாக் காரியங்களும் செவ்வனே நடந்து வருகின்றனவா என்று பார்க்கவேண்டும். வருஷத்துக்கு மூன்று அல்லது நான்கு தரம், ஸ்தலங்களில், கோவிலதிகாரிகள் கூடி, மதத்தைப்பற்றியும் இன்னும் தங்களைச் சேர்ந்த முக்கிய கடமைகளைப்பற்றியும் பேசி வழுவுகளிருந்தால், அவைகளைச் சீர்திருத்தஞ் செய்ய வேண்டும்.

இவ்வாறெல்லாம் இங்கிலீஷ்காரர்கள் செய்துவந்ததினாலன்றோ முதல், ரோமிலிருந்து வந்த அவர்களின் கிறிஸ்தவ மதம், இங்கிலாந்தில் சடுதியில் பரவி, கல்வியை அபிவிருத்தி செய்து, அநேக புலவர்களை உண்டுபண்ணி ஜனங்களின் நடவடிக்கைகளைச் சீர்திருத்தி, ஒற்றுமையை அதிகப்படுத்தி பிறகு தேசம் ஒரே ராஜாவின்கீழ் வருவதற்கும், சுலபமாகவுஞ் செய்தது? இங்கிலாந்தடைந்த நாகரீகத்துக்கும், இன்னும் அது

ஐரோப்பாவிலிருந்து கற்றுக்கொண்ட விஷயங்களுக்கும் அவர்களுக்குள்ளிருந்த ஒற்றுமையினாலும் விஷயங்களை ஆழ்ந்தும் ஒழுங்குமாகச் செய்துவந்த முடிவினாலன்றோ?

இவ்வாறே நாமும் செய்து வந்தால் நம்முடைய மதம் சீக்கிரம் பரவுமென்பதில் சந்தேகமில்லை. கோவிலதிகாரிகள், கழகங்கள் ஏற்படுத்தி, கற்றுவல்ல புலவர்களைக்கொண்டு, ஏழைப் பிள்ளைகளுக்கு, மதத்தைப்பற்றிய விஷயங்களையும், தெய்வபக்தி முதலிய, நற்குணங்களையும் கற்பித்தல் வேண்டும். தருமவைத்திய சாலைகள் ஏற்படுத்தி கூடியவரையில் ஏழைகளுக்கு இனாமாக மருந்தளிக்கவேண்டும். வேலைசெய்யச் சக்தியற்ற ஏழைகளுக்கும், கூடியவரையில் உணவு ஆடை அளித்தல் வேண்டும். ஏனெனில், "தருமமென்பது" மதத்தின் முக்கியமான பாகமென்பது என் கொள்கை. மேற் கூறப்பட்ட கழகங்களில் படித்துத் தேர்ச்சியடைந்தவர்களுக்கே, கோவிலதிகாரிகள் முதலிய பதவிகள் கொடுக்கப்பட வேண்டும். பஞ்சாயித்து சபை சொற்ப கோவிலிலும் அமைக்கவேண்டும். கற்றுவல்ல புலவர்களுக்கு அவர்கள் திறமைக்கேற்றபடி அவர்களுக்கு வருஷாந்தரம் பரிசு கொடுக்கப்படவேண்டும். இவர்களைக்கொண்டு மதத்தைப்பற்றி முக்கியமான ஜனக்கூட்டமான விடங்களில் பிரசங்கம் செய்யும்படி ஏற்பாடு செய்வதன்றியில், மதத்தைப்பற்றிய முக்கிய விஷயங்களை அச்சிட்டு அப்புத்தகங்களைச் சொற்ப கிரயத்துக்கும், ஏழைகளுக்கு இனாமாகவும் கொடுக்கும்படி செய்ய வேண்டும். இஃதெல்லாம் சரிவர நடக்கும்படி கற்றுவல்ல புலவர்களுக்குக் கஷ்டமில்லாமல் நிலம் அல்லது அவர்களுக்கு சௌகரியமான காலக்ஷேபத்துக்கு வேண்டிய வற்றைக்கொடுக்கவேண்டும். மேற்கூறியவைகளெல்லாம் சரிவர நடப்பதற்கு ஏராளமான பணம் வேண்டிய தவசியம். ஆகையால், கோவிலதிகாரிகள் கோவிலின் நிலங்களிலிருந்தும் இன்னும் மற்றுமுள்ள வழிகளிலிருந்தும் வருகிற வரும்படிகளை வீண் செலவு செய்யாமலிருக்கவேண்டும். இவர்கள், கணக்கர்கள் வரவு செலவு கணக்குகள் எழுதவேண்டும். இக்கணக்குகளைப் பரிசோதிப்பதற்கு [illegible]த்தலங்களிலுள்ள முக்கியமானவர்கள் வருஷாந்தரம் கூடவேண்டும். சரிவர நடவாத கோவிலதிகாரிகளை பிரதான அதிபதியாயிருந்தாலும், அவர்களைத் தள்ளும் பாத்தியம் ஜனங்களுக்கு பூராவாயிருக்கவேண்டும். ஒழுங்காய் நடப்பவர்கள், மேலான பதவிக்கு உயர்த்தப்பட வேண்டும். இவ்வாறு நம்மை நாம் சீர்படுத்துவதுண்டெனின் நாமும் நமது மதமும் பண்டைய நிலைக்கெய்துவதிற்றடையில்லையாம்.

N. M. சபாபதி முதலியார்.

சீயாழி.

சோதிட கலா நிதி

(297-பக்கத்தொடர்ச்சி)

சோதிடம் கர்மாநுஷ்டான காலங்களைத் தெரிவிப்பதாதலாலும், அக்காலங்கள் நவக்கிரகங்களன்றி மற்றைய சோதிர்கணங்களின் கதியை யபேட்சிக்கா திருப்பதனாலும், இச்சோதிர்கணங்களினுடைய கதிகளைக் கண்டறிதற்குத், தபோநிஷ்டர்களான மகரிஷிகள், கணிதப் பிரகாரங்களைச் சொல்லாமல் விட்டுவைத்தனர்.

புராணங்களில் சொல்லியுள்ள கிரகஸ்தானங்களும், தேவதாஸ்தானங்களும், வேறுவேறாக இருக்கின்றது. கிரகஸ்தானமண்டலஸ்தானங்கள், வேறுவேறாக விருப்பதைத் தெரிந்துகொள்ள சாத்தியமின்றி, புராணங்களைத் தூஷிப்பது அவிவேகமாயிருக்கின்றது.

"வானுறுகதியுஞ்சோதி சூக்குமவடிவுமாந்தர்,
ஊனுறுகண்களாலேயோர்வதற்காயதன்றே"

என மச்சபுராணம் புவனகோசவத்தியாயங் கூறுமாற்றால், கிரகங்களுடைய இராசி சஞ்சாரத்திற் காதாரமான, மண்டலங்கள் மாத்திரமே நமக்குத் திருசியமாயிருக்கின்றது, அம்மண்டலங்களை யதிஷ்டித்து நடத்திக்கொண்டு போகுங் காலாதிகாரிகளான கிரகங்கள், நமக்குத் தெரியமாட்டார்கள். இங்ஙனம் தெரியமாட்டார்கள் என்று கூறிய மாத்திரத்தினாலேயே அவர்களாங்கு இல்லை என்று சொல்லுதல் அவிவேகமன்றோ!

தரணியிலுதித்துத்தத்த முறையிற்சற்கருமமாற்றி
வரமுறக்கதிரிரண்டின் மண்டிலத்துறைவோர்தம்மைக்
கருமதேவதைகளென்ப கருதுமன்வந்தரங்க
ளருகுறும்போழ்தில்வெய்யோ னுதியாங்கிரகம்யாவும்.

எனமச்சபுராணம் புவனகோச சமாத்தியாயம் கூறுமாற்றால், சூரிய சந்திராதி கிரகமண்டலங்களிலும், ஏனையசோதிர் கண மண்டலங்களிலும், தேவவாசமாகவே இருக்கின்றது. கிரக மண்டலங்கள் கர்மபூமியிலிருப்பவர்களுக்குக், கர்மாநுஷ்டான காலத்தைத் தெரிவிப்பதற்கும், அவற்றின தரிசன விசேடத்தாலும் ஏனைய சோதிர் கணங்களின் தரிசன விசேடத்தாலும், ஜீவர்களுக்குப் பாபநிவர்த்தி யாவதற்கும், சிருஷ்டிக்கப்பட்டி

ருப்பதனுல், அவைகள் பாபிகள் சகிதமாக யாவருக்கும் திரு சியமாகும்படி அமைக்கப்பட்டிருக்கின்றன.

அக்கினி ஹோத்ராதிக்கினி ஜ்வாலைகளுடன் கூடி ஜ்வலித்துக்கொண்டிருக்குஞ் சூரியமண்டலமும், அதிலிருக்கும் அதிகாரபுருஷனை சூரியனையும், அந்த மண்டலாந்தர் யாமியும் சர்வேசுவரனுமான பரபிரம்மத்தையும், சூரியரதகண பரிவார காலசக்ராதிகளும், சூரியகிருத்தியங்களும், அருண்மேகமும் சுற்றி யிருக்கின்றன. சூரியமண்டலத்தை இம்மேகம் சுற்றி யிருப்பதனுல் தெரியப்படும் காந்தி விசேடமாகிய சூரிய தேஜஸினுல் கிரகநக்ஷத்திராதி சோதிர் கணங்களுள் பிரகாசமடைந்து விளங்குமென்றுணர்க.

ஆதித்யாஜ்ஜாயதே வ்ருஷ்டிர்
வ்ருஷ்டேரந்நம் ததப்ரஜா.

என்றபடி அந்ந முதலானவைகளை வளர்ப்பதற்கும், சமஸ்த பிராணிகளுக்கு மாதாரமான மழையை யுண்டாக்கச் செய்வதற்கும், லோகத்திற் காதாரமாக இருப்பவன் சூரியன் என்றும், சூரியனுக்காதாரம் துருவன் என்றும், துருவனுக்காதாரம் சிம்சுமார சக்கிரமென்றும், அதற்காதாரம் ஸ்ரீ சர்வேசுவரனென்றும் அறிக.

துருவனிவ்வுடுக்களாதி தூய்நவக்கிரகங்கட்கு
மருவொளிகொடுத்துமேரு வுச்சியில்வதிந்தமேருப்
பருவரைக்கிழாய்நோக்கிப் பகர்சோதிச்சக்கரத்தை
விரிதருமேருச்சுற்றி யிருப்பனவிளங்கெஞ்ஞான்றும்.

எனமச்சபுராணம் துருவப்பிரசங்கிதை யத்தியாயங்கூறு மாற்றுனும் உணர்க. "மைபறுகதிர்ச்சூழாத்தான் மருவியகிரகத்தோடும், ஐயமின்றனைத்துக்கு பணிசடா வழங்குமன்றே" எனபாகவத புராணங் கூறுமாற்றுல் சூரியனுலேயே ஏனைய கிரகமண்டலங்களும் சோதிர் கணங்களும் பிரகாசமடைந்து விளங்குமென்று விளங்குகின்றன. ஆகலின் மச்சகூர்ம புராணங்களின்படி சூரியனுடைய கிரணங்கள் ஆயிரமென்றும், அவற்றுள் ஏழுகிரணங்கள் சிறந்தனவென்றும் அவைமுறையே சுஷுமுனை, அரிகேசம், விசுவைவசம், சங்கியம், வசுரம், அருவாவசு, சுவராட்டு என்னும்பெயருடையனவென்றும், இவைகள் முறையே மதி, புதன், சுக்கிரன், பூமி, குஜன், குரு, சனி என்னுங் கிரகமண்டலங்களுக்கு ஒளிதந்து விளக்குகின்றவென்று ஏற்படுகின்றன. கஜச்சாயை என்

னும் பெயருடைய சந்திரனின் நிழல் ராகுவினால் அதிஷ்டிக்கப் பட்டுச் சூரிய கிரகணத்திற்குக் காரணமாகின்றது. சந்திரமண்டலத்திலிருக்கும் லோகங்களின் நிழல் நமக்குக் களங்கமுடன் காணப்படுகின்றது. அமாவாசைகளில் ஒஷதிகளிலும் உதகங்களிலும் சந்திரன் மறைந்து கொள்ளுகிறான் என்று புராணங்களில் இருப்பதற்குவிஷயம் சந்திரமண்டலமன்று, அதனுடைய அதிஷ்டான தேவதையேயாம். இராகுமண்டலமானது குரு மண்டலத்திற்குஞ் சனிமண்டலத்திற்கும் மத்தியில் அதிருசியமாக இருக்கின்றது, அவ்விராகு சாயாகிரகமாதலினால் சூரிய சந்திர மண்டலங்களுக்குச் சமானமான ஸ்தானத்தில் சமசூத்ரஸ்தனாய் வர்த்தித்துச் சந்திரபூமிகளினுடைய சாயைகளைப்பிடித்துக்கொண்டு சூரிய சந்திர கிரகணங்களை யுண்டாக்குகின்றனன். ஆகவே அமாபருவாந்தங்களில் முறையே சூரியசந்திர கிரகணங்களுண்டாகின்றன. "மன்னுமிந்திரமதி கதிர்மண்டிலம் விழுங்க, முன்னமே யெமைவிதித்தனை" என இராமாயணம் அநுமப்படலத்தும் ஏனைய புராணங்களிலும் கூறப்பட்டுள்ளன ஆதலால், இவ்விருபருவத்தில் ராகு சூரிய சந்திரர்களை விழுங்குகின்றார் என்று புராண கதாவிரோதம் சம்பவிக்கின்றனவன்றோ! இவ்விஷயமாய் பிராசீன ஆசார்யர்கள் அனியுத சுதியையுடைய இராகு பிரம்ம வரப்பிரசாதத்தினால் பூமியின் சாயையில் பிரவேசித்துக்கொண்டு சூரியனை மறைக்கின்றார் என்று கூறியுளார். ஆகலின் சம்மிதாகாரர்கள் இராகுவையெட்டாவது கிரகமாக கிரகித்துள்ளதற்கும் சுருதிமுதலாகவுள்ள ஆகமத்திற் சொல்லப்படும் புராணகதைக்கும் எவ்வளவும் விரோதமில்லை. இதுபற்றியே ஸ்ரீபதியாசாரியர் தமது சித்தாந்த சந்திரிகையில் "ராஹுர்ப்ரஹ்மப்ரஸாதாத் ஸமதிகதவரஸ்தத் தமோவ்யாஸதுல்ய" எனவும் பாஸ்கராசாரியர் தமது சித்தாந்த சிரோமணியில் "தமோமயஸ் ஸம்புவரப்ரதாநாத் ஸர்வாகமாநாம விருத்தமேதத்" எனவுங் கூறியுளார். மற்றைய விவரங்களைப் பகோளப்பிரகரணத்தில் விரிவாய் கூறப்படுமாகலின் ஆண்டுணர்ந்துய்க.

சூரியன் சந்திரன் முதலான கிரகங்களெல்லாம் இப்பூமியைப்போல் உயிரற்ற கல்மண்முதலானவைகளாதலால் அவைகளில் யாரோ தேவதைகளிருந்து நடத்துகின்றார்களென்று சொல்வது தவறு என்று அனேகர் ஆக்ஷேபிக்கின்றார்கள்.

(இன்னும் வரும்)

வித்வான்-வ-கு. வேலு நாயகர்,
பாலசோதிடர், வேலப்பாடி.

இருமல்ரோகம்

(301-ம் பக்கம் தொடர்ச்சி)

இந்தப் பவழ நீற்றை நான் பின்னர் சொல்லப்போகும் நோய்களுக்குக் கொடுத்தால் அந்நோய்கள் மிகவும் விரைவாய் நீங்கும். இப்பவழ நீறு செய் முறையை எவருக்குஞ் சொல்ல வேண்டாம். இந்தப் பவழ நீற்றில் ஒரு பணவெடை என்கிற இரண்டு குன்றிமணி யளவு எடுத்து உயர்ந்ததான கொம்புத்தேனையும், பசு நெய்யையுங் கலந்து கொண்டு அதில் கூட்டிச் சாப்பிட்டால், மேகத்தாலுண்டாகும் கிரந்தியும், சூலையும், கெட்ட இருமலும் (க்ஷயமும்) ஈளையும், இரைப்பிருமலும், மூக்கில் நீர் சொரிதலும் நீங்கும்.

இவ்விரண்டு பாடல்களில் முதற்பாடலில் முதலடியில் முதலில் உள்ள 'பார்' என்பதற்கு நீ யாராய்ந்து பார்த்தறிந்து கொள் என்பது பொருள்.

இரண்டாவது அடியில் முதலில் உள்ள 'நேர்' என்பதற்கு பொருந்தின அளவாக என்பது பொருள்.

மூன்ருவது அடியில் முதலில் உள்ள 'போர்' என்பதற்கு நன்ருய் அந்த மெல் அடையைப் போர்த்துவிடு (அதாவது மேலேவை) என்பது பொருள்.

நான்காவது அடியில் முதலில் உள்ள 'ஆர்' என்பதற்கு நீ உடனே பிரித்து விடாதே! தண்மையா யாறுகிற வரைக்கும் பொருத்திரு என்பது பொருள்.

இரண்டாவது பாடலில் முதல் அடியில் முதலில் உள்ள 'இட்டு' என்பதற்கு வைத்து என்பது பொருள்.

இரண்டாவது அடியில் முதலில் உள்ள 'திட்டம்ஆம்' என்பதற்கு நோய்க்குத் தக்க முறையான என்பதுபொருள்.

மூன்ருவது அடியில் முதலில் உள்ள 'கொட்டாதே' என்பதற்கு பணவெடை யளவு கொடுப்பதை விட்டுப் புத்தியில்லாமல் அதிகமாகக் கொட்டிவிட வேண்டாம் என்பது பொருள்.

நான்காவதுஅடியில் முதலில்உள்ள 'தட்டாது'என்பதற்கு அடியிற் சொல்லப்படும் நோய்களெல்லாம் இந்தமருந்துசாப்பிட்டால் யாதொருதடையுமில்லாமல் நீங்கும் என்பதுபொருள்.

முதற் பாடலில், பார், கேள், நீ, பார் எனவும்; இரண்டாவது பாடலில் பார், செப்பாதே, பார், கொட்டாதே தூக்கு, கொள்ளு எனவும் முன்னிலை யொருமையாகச் சொல்லி 'என் மக்காள்' எனப் பன்மையாகக் கூறியது முறையாமோவெனின் மாணுக்கர்கள்கூடியுள்ள கூட்டத்தின்கண் ஒருவனை நோக்கிச் சொல்லுகையில் மற்றவர்கட்கும் உணர்த்தியதைக் குறிப்பித்ததா மென்றறியக் கடவர். (இன்னும் வரும்.)

மா. வடிவேலு முதலியார்.

கௌரீ விஜயம்

(304-ம் பக்கத் தொடர்ச்சி.)

அறிவு கெடுவதால் ஒருவன் முற்றும் கெட்டுப்போகிறான் இந்திரிய அடக்கமும் மன அடக்கமும் இல்லாதவனுக்கு ஒரு ஆசிரமமும் பயன்பட மாட்டாது. அவர் இந்திரியங்களை வென்றவர் பொய்யாமை, கொல்லாமை, கள்ளாமை, இன்னாசெய்யாமை, நன்றிமறவாமை முதலிய நற்குணங்களுடையவர், அவரைப்போல் சிறந்த பிராமணரைக் காண்பதரிது. அவரைப் பார்த்தாலே பண்ணின பாவமெல்லாம் போகுமே!

கோபா:—ஓய்! தீக்ஷிதரே; அவருக்கு சுபவிருதை யென்றொரு மனைவி யிருக்கிறாளல்லவா? அவளைப்பார்த்தால் இவள் அனசூயா தேவியோ, சீதாதேவியோ, சாவித்திரி தேவியோ, அருந்ததி தேவியோ என்று யாவரும் சந்தேகிப்பார்களே! அவள் காரியங்களைச் செய்வதில் பணிப்பெண்போலவும், உருவத்தில் திருமகள்போலவும், மந்திராலோசனையில் மந்திரிபோலவும், அன்பில் தாய்போலவும், பொறுமையில் பூதேவிபோலவும் இருக்கின்றாள். அவள் கணவனிடம் மெய்யன்புடையவள்; அவள் விருந்தினரை அன்போடுமுகமன்கூறி உபசரிக்கின்றாள்; கற்புநிலை தவறாதவள்; எப்பொழுதும் கடுகடுத்தவாறில்லாமல் மலர்ந்த முகமுடையவள்; வரவுக்குத் தக்கபடி செலவு செய்பவள்; தனது கணவனையே தெய்வமாகக்கொண்டு கணவனையே எவ்விதத்திலும் மகிழ்வித்து வருகின்றாள். அத்தம்பதிகள் இருவரும் மிகவும் நேசமாய் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் வீட்டிற்குச் சென்றவர் அதிர்ப்தியோடு திரும்பினதேயில்லை. அவர்களுக்குப் புத்திர செல்வமில்லாக் குறையேயன்றி, வேறொன்றும் குறை இல்லை.

சாமா:—ஆமாம், சாஸ்திரிகளே! மக்களைப்பெற்று ஆனந்தமடையாத ஜன்மமும் ஒருஜன்மமா? அக்குழந்தைகளின் குறுநடையைக்கண்டு களிக்காத கண்ணும் ஓர் கண்ணா? அது புண்ணன்றோ? மதலைகளின் குதலைச்சொற்களைக்கேட்டு இன்பமடையாத காதும் ஓர் காதா? அது கோதல்லவா? குழந்தைகளை எடுத்து அணைக்காத மார்பும் ஓர் மார்பா? அது மலைச்சார்பல்லவோ? எது இருந்தும் பயனென்ன? ஒருவனுக்குச் சகிக்க முடியாத துன்பம் வந்து, அதனால் அவன் துக்கப்பட்டுக் கொ

ண்டிருக்கும்பொழுது, தன் குழந்தை ஏதேனும் அழகிய ஒரு வார்த்தை சொல்லிவிட்டால், அதனால் அவன் தனது துன்பங் களை யெல்லாம் மறந்து, குழந்தையைத் தழுவிக்கொண்டு ஆன ந்த மடைகிறானல்லவா? அப்படியிருக்க, சந்தோஷத்திற்குக் காரணமான குழந்தை ஒன்றேனும் இல்லையானால் அத்தம்பதிக ளின் வாழ்க்கை என்ன பயனுடையது? அவர்களின் வருத்தத் திற்கு அளவுண்டோ?

கோபா:—இக்காலத்தில் பெண்குழவிகள் பலரிருந்தாலும் புத்திரனைப் பெறுவதற்காக எத்தனை தம்பதிகள் புண்ணியஸ்த லங்களுக்கு யாத்திரை செய்யவில்லை? எத்தனைபேர் நாகப்ரதி ஷ்டை, ஸர்ப்பசாந்தி முதலியவைகளைச் செய்யவில்லை? எத்தனை பேர் ஸஹஸ்ர போஜனம் செய்தும் இராமாயணம் வாசிக்கச் செய்தும் பணத்தை ஏராளமாய் செலவு செய்யவில்லை? அவ்வா றிருக்கும் பொழுது விருபாக்ஷ தம்பதிகளின் மனக்குறையை யாரால்தான் சொல்லக்கூடும்?

சாமா:—கடவுள் விரைவில் விருபாக்ஷருடைய மனக்கு றையைத் தீர்த்து வைப்பார். ஸர்வேசுவரன் பக்தருடைய மனோரத்தை நிறைவேற்றி வைப்பார் என்பதில் யாதும் ஐய மில்லை. இனி நேரமாய்விட்டது. வீட்டிற்குப் போகவேண்டும்.

கோபா—:நானும் இதோ வருகின்றேன். (இருவரும் போகின்றனர்.

காட்சி-௨

இடம்: விருபாக்ஷருடைய சயனகிருகம்.

(விருபாக்ஷரும் சுபவிருதா தேவியும் பிரவேசிக்கின்றனர்)

விருபா:—காதலி! நான் முற்பிறப்பால் என்னபாவத்தைச் செய்தேனோ! எந்த மகாத் மாக்களுக்கு அபசாரம் செய் தேனோ! யாசித்தவருக்கு இல்லையென்று மறுதளித்தேனோ! சிறு குழந்தைகளை அடித்தேனோ! அடைக்கலம் என்று அடுத் தவரை ஆதரிக்காமல் தள்ளிவிட்டேனோ! பிறர் பொருளை அப கரித்தேனோ! பொய்ச்சான்று உரைத்தேனோ! கூலிக்காரருக்குக் கூலி கொடாமலிருந்தேனோ! என்னிடம் கூறிய ரகஸ்யத்தை வெளியிட்டேனோ! அதிதியரைக் காக்கவைத்துப் புசித்தேனோ! எனக்குக் கடவுள் பலவிதமான செல்வங்களை அளித்திருந்தும் குழவிச் செல்வத்தைமாத்திரம் அளிக்கவில்லையே! மக்களாய்ப்

பிறந்தவர். இயல்பாகஇறுக்கப்படும் கடன்மூன்று; அவைமுனிவர் கடன், தேவர்கடன், பிதிர்க்கடன் என்பவைகளாம். முனிவர்கடன் வேள்வியாலும், தேவர்கடன் யாகத்தாலும், பிதிர்க்கடன் புத்திரர்களைப் பெறுவதாலும் தீர்க்கப்படவேண்டும். புதல்வரைப்பெருத நான் பிதிர்க்கடனை எவ்வாறு தீர்ப்பேன்? புத்தென்னும் நரகத்தினின்றும் நான் உய்வதற்கு வேறுவழியில்லையே! நன்மக்களைப்பெருத நமது வாழ்க்கை என்ன பயனுடையது? நாம் செய்யும் தானதருமங்களெல்லாம் வீணேயாகின்றன. மக்களைப்பெருத நமக்குநற்கதி ஏது? இதுபற்றியே ஆன்றோர்.

"மெய்தானம் வண்மைவிரதந்தழல் வேள்வி நாளுஞ்
செய்தாலு ஞாலத் தவர்நற்கதி சென்று சேரார்
மைதாழ் தடங்கண் மகவின்முக மன்னு பார்வை
யெய்தாதொழியிற் பெறுமின்ப மிவணுமில்லை."

என்று கூறியுள்ளர். இது பற்றியே, அகஸ்தியமுனிவர், மரமடர்ந்த ஓர் ஆரண்ணியத்தில் ஓர் ஆலமரத்தில், பல வாவலுந வோடு அதோமுகராய் பலகாலம் துன்புற்றிருந்த பிதிர்க்கள நற்கதியடையுமாறு, உலோபாமுத்திரையென்னும் மாதரசியை மணந்துகொண்டு திரிதசுயென்னும் புத்திரனைப்பெற்று,தாமும் இன்பமடைந்தார் என்று இதிகாசங்கள் கூறுகின்றனவே.

சுபவிரதை:—நாதா! தாங்கள் கூறுவது மெய்தான் புதல்வரைப் பெருதவர்களுக்கு இம்மையினும் மறுமையினும் சிறிதும் இன்பமில்லை. மக்கள் சிறுகைகளால் துழாவிய கூழ் அமிழ்தினும் இனியதன்றே? வீணையின் ஒலி இனிதென்று தமது மக்களின் குதலைச் சொற்களைக் கேளாதவரே சொல்லுகின்றனர். நான் 'மலடி' யென்னும் வசை மொழிக்குப் பாத்திரையானேனே! 'அப்பாவா! ஐயாவா!' என ஒரு முறை அழைக்குமுன் ஓடித்தவழ்ந்து பற்றிப்புயங்களிலேறி விளையாடும் மக்களைப் பெறும் பாக்கியத்தையும் கடவுள் நமக்குக் கொடுக்க மாட்டாரா!

"பொன்னுடையரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனுமுடையரோ—இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங்கில்லா தவர்."

"சொன்ன கலையின் றுறையனைத்துந் தோய்ந்தாலு
மென்னபயனுடைத்தா மின்முகத்து—முன்னங்
குறுகுதலைக் கிண்கிணிக்காற் கோமக்கள் பல்வாய்ச்
சிறு தலை கேளாச் செவி." என்று ஆன்றோர் கூறியிருப்பது நமது அநுபவத்தை ஒட்டியிருக்கின்றது. தாங்கள் எப்பொழுதும் பகவானை உபாஸிக்கிறீர்களே தங்களுக்குக் கடவுள் புத்திரச் செல்வத்தைக் கொடாமல் தங்களைப் பரிசோதிப்பது நியாயமா?

விரு:—ஆருயிர்க்காதலி! நீ இவ்வாறு கடவுள்மீது பழி சுமத்துவது தவறு. கடவுள் அவரவர்களின் வினைக்குத்தக்கபடி பயனையளிக்கின்றார். மழை அதிகமானபொழுது அதைத் தணிக்கவும், மழை குறைந்தபொழுது அதை வரவழைக்கவும் ஒருவருக்கும் ஆற்றல் இல்லாமைபோல, நல்வினைப்பயன் வந்தபொழுதும் தீவினைப் பயன் வந்தபொழுதும் அவற்றைத் தணிப்பதற்கு ஒருவருக்கும் சக்தியில்லை. அவரவர் செய்த கர்மத்தின் பயனை அவரவர்கள் அநுபவித்தே தீரவேண்டும்.

சுப:—ஆர்ய புத்திரா! அவ்வாறாயின் பகவானே அந்தர்யாமியாய் இருந்துகொண்டு பிராணிகளைத் தீவினைகளைச் செய்யச் செய்து துன்பப் படுத்துவது நியாயமா? அன்றியும், கர்மத்தின் பயனை அநுபவித்தே தீர்க்கவேண்டுமென்றால், வேதம் சாந்தி கருமங்களை விதிப்பதன் பயன் யாது?

விரு:—பிராணியானவன், துன்பத்தை நீக்கிக் கொள்வதற்காகக் கொடுக்கப்பட்டதான இந்திரியங்களாலும் சரீரத்தினாலும் தீவினைகளைச்செய்து துன்பத்தைத் தேடிக்கொண்டால், ஈசுவரன் பேரில் பிழை என்ன இருக்கிறது?

ஆசிரியன் பகைவரை ஜெயிப்பதற்காகக் கொடுத்த ஆயுதத்தினால் தனது தலையையே அறுத்துக்கொண்டால், குருவின் பேரில் பிழையாது? சாந்திகர்மங்கள் செய்தபொழுது மனம் சமாதானப்படும். அச்சமாதானத்தால் அநுபவம் கடுமையாயிராது.

சுப:—நாதா! பிராயச்சித்தங்கள் செய்தும் கர்மத்தின் பயனை அநுபவித்தே தீரவேண்டுமென்றால், ஈசுவரனுக்கு உண்டாகும் பெருமை என்ன? இதனால் கடவுளின் கருணைக்குக் குறைவு உண்டாகுமல்லவா?

விரு:—சுபவிரதா! பொது நோக்கமுள்ள அரசன் குற்றவாளியின் குலத்தையும் நிலைமையையும் கவனியாமல் குற்றத்திற்குத் தக்கபடி தண்டிப்பதுபோல, ஈசுவரனும் பிராணிகளின் கர்மத்திற்குத்தக்கபடி பலனைக் கொடுக்கின்றார். இவ்விஷயத்தில் கற்றறிந்தவர் குறைகூற மாட்டார்கள். எண்ணறப்படிப்பினும் 'பெண்புத்தி பேதமை' என்ற பழமொழி உனது இயற்கையை வெளிக்காட்டுகின்றது. ஆதலின், இனிக்கடவுள்பேரில் குற்றமேற்றவேண்டாம். நாம் கடவுளிடம் பக்தியுடன் இருந்தால் 'நமது விருப்பங்கள் யாவற்றையும் அவர் நிறைவேற்றிவைப்பார். நீ சஞ்சலப்படாதே.

சுப:—நாதா! நான் அறியாமையால் கூறிய பிழையைப் பொருத்தருளவேண்டும். இது காறும் தாங்கள் கூறியவற்றால் இவ்வுலகில் நேரும் இன்பதுன்பங்கள் முற்பிறப்பில் செய்த கர்மங்களின் பலனென்றும், அவற்றை அநுபவித்தேதீர்க்கவேண்டுமென்றும், பகவானை பக்தியோடு உபாஸித்துவந்தால்பெரும்பேற்றையும் பெறலாமென்றும் அறிந்தேன். தங்களுக்கு ஸ்நானஞ் செய்யப்போகும் நேரமாயிற்றே!

விரு:-ஆமாம், ஸ்நானத்திற்கு நேரமாயிற்று. போய்வருகிறேன்.

(போகின்றனர்.)

காட்சி—௩.

இடம்:—விருபாக்ஷர்வீடு

(விருத்தயோகி ஒருவர் காவிவஸ்திரமும், கையில்கமண்டலமும், த்ரிதண்டமும், நெற்றியில் திருநீறும் தரித்துப்பிரவேசிக்கிறார்.)

யோகி:—(விருபாக்ஷர் வீட்டுவாயிலில்வந்து, 'பவதிபிக்ஷாம்தேஹி!' என்று மெதுவாய்க் கூறுகிறார். விருபாக்ஷரும் சுபவிரதையும் பரபரப்புடன் ஓடிவருகின்றனர்.)

விரு:—(யோகியை உற்றுப் பார்த்துத் தனக்குள்) இவர் மக்களில்லாத என் மனக்குறையைப் போக்கவந்த ஈசனோ! தவமெல்லாம் சேர்ந்து ஓர் உருவெடுத்து வந்திருக்கிறதோ, ஆதியில் பார்வதி பரமசிவனைக் கணவனாக அடைய விரும்பித் தவம் செய்த பொழுது, அப்பார்வதி தேவியைச் சோதிக்கத் தவசியாய்வந்த கோலம் இதுதானோ! (உரக்க) ஸ்வாமிகாள்! இந்த நடுவெயிலில் கோடிசூரியனைப்போன்ற திவ்யகாந்தியையுடைய

தாங்கள் அடியேனுடைய குடிசையில் வந்து நிற்பதோ? இது நிலஞ்செய்த தவமோ? என் நலஞ்செய்த தவமோ? அல்லது என் குலம்செய்த தவமோ? யாதோ அறியேன். தாங்கள் அடியேன் குடிசையில் எழுந்தருளியதனுல் இம்மனை நன் மனையாயிற்று. இன்றுதான் நாங்கள் செய்த புண்ணியம் பலித்தது. இன்றே நாங்கள் கிருதார்த்தர்களானோம்.

(அர்க்யம்,பாத்யம், ஆசமனீயம்முதலியவற்றைக்கொடுத்து நமஸ்கரித்து)மஹானே! தாங்கள்உள்ளேவந்துஅமுதுண்டு எனக்கு அநுக்கிரகஞ் செய்யவேண்டும். ஏனெனில் இவ்வுலகத்தில் விருந்தோம்பலைப்போல் நலந்தருவது ஒன்றுமில்லை. விருந்தோம்புவான் சகல நலங்களையும் பெறுவானன்றோ?

யோகி:—"அன்புடையார் என்பு முரியார் பிறர்க்கு" என்பதைத் தங்களைக் கொண்டுதான் நிச்சயிக்கிறேன்.

விரு:—அன்புடையார் சமர்ப்பிப்பது தினையளவானுலும், அதுதங்களைப்போன்ற மஹான்களின்கைப்பட்டமாத்திரத்தில் வானமுஞ் சிறிதென்னும் படிப்பெருகி விடுகிறது. தாங்கள் பூரணமான மனமுடையவர்களானதாலும், சிவபெருமான் சந்திரன், விஷம் இரண்டையும் கிரகித்து, சந்திரனைத் தலையில் வைத்துக் கொண்டாடியும், விஷத்தை கழுத்துக்குள் அடக்கியும்இருப்பதுபோல, குணம், குற்றம் இரண்டையும் கிரகித்து, குணங்களைக் கொண்டாடுவதும் குற்றங்களைக்கூருது ஒழிதலும் பெரியோர் செய்கையாதலாலும், என் சிறுமை தங்களுக்குப் புலப்படவில்லை.

யோகி:—பிறருக்கு உதவுதல் என்னும் இச்செயலைத் தாங்கள் ஒரு விரதமாகவன்றோ கொண்டிருக்கிறீர்கள்? ஒருஅதிதிக்காயினும் அளித்த பிறகே சாப்பிடுவது என்னும் அழியா விரதத்தைக் கொண்டிருப்பவர்கள் தங்களையன்றி யாரிருக்கிருர்கள்? ஊராரை ஊட்டிவளர்த்தால் தன்னைக் கடவுள் காப்பார் என்பது உமது கொள்கை யன்றோ?

'செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத்தவர்க்கு' என்றபடி விருந்தோம்புவோனைத் தேவர்களும் பூஜிக்கின்றனர். விருந்தோம்புதல் பஞ்சமகாயஞ்ஞங்களில் ஒன்ரும். நீரோ பிரதிதினம் அகமும் புறமும் ஒருங்குமலர்ந்து, விருந்தினரை உபசரிக்கிறீர்கள்.

(இன்னும் வரும்.) M. M. நாராயணசாமி அய்யர்

குடித்தன நூல்

வீட்டுச் சாமான்கள்

ஒரு குடும்பத்திற்கு வேண்டிய சாமான்கள் அக்குடும்பத்தின் அந்தஸ்தையும், ஜாதியையும் பொருத்ததாக இருக்கிறது. பிராமணக் குடும்பம், அஃது எவ்வளவு ஏழையாக இருந்தாலும் மட்பாத்திரங்களை உபயோகிக்கிறதில்லை. மற்ற ஜாதிக்குடும்பங்கள் மட் பாத்திரங்களை ஏராளமாகக் கையாடுவதுண்டு. சாதாரணமாக ஒரு நடுத்தரமான குடும்பத்திற்கு சமையற் பாத்திரங்கள் விளக்குகள் இவற்றைத் தவிர வேறு சில சாமான்களும் வேண்டும். அவையாவன:

உட்காருகிறதற்கு இரண்டொருபலகைகள்.
குழந்தைகளுக்கு ஒரு தொட்டில்.
உடைகள் வைத்துக் கொள்வதற்கு ஒவ்வொருவருக்கும் [ஒரு பெட்டி.

அநேக குடும்பங்களில் இப்போது நாற்காலிகள் மேஜை, கட்டில், அலமாரி முதலிய சாமான்கள் காணப்படுகின்றன.

இவையெல்லாம் மரச்சாமான்கள். அவற்றில் தேக்கு மரத்தாலானவை சிலாக்கியமாம், அவற்றைச் செல்லரிக்காது.

அழகான சாமான்களைக் காட்டிலும், உறுதியான சாமான்களே மேல்; அவை நீண்டகாலம் பழுதில்லாமலிருக்கும்; வெளிக்குப் பகட்டாகக் காணப்படும் சாமான்கள் கொஞ்சகாலம் அழகாயிருக்கும் பிறகு அவற்றின் பளபளப்பொழிந்து அவை அவலக்ஷண மாவதுந் தவிர, அடிக்கடி பழுதாகும். அவற்றுக்காக செலவிட்ட பணத்தில் காற்பங்குக்குக் கூட அவற்றைவிற்கமுடியாது.

முதலிலேயே நல்ல, உறுதியான சாமான்களைப் பார்த்து வாங்குதல் வேண்டும்; அவசியமானகாலத்தில் ஏறக்குறைய வாங்கின விலைக்கே, அவற்றை மறுபடியும் விற்றுவிடலாம். அவை கொத்து வேலையில்லாமல் மிகச் சாதாரணமாக இருந்தாலும் பரவாயில்லை. மரம் தேக்காயிருந்தால் போதும். சாமான்கள் உறுதியாக இருக்கும். அவற்றைச் சமயம் பார்த்து வாங்குதல் நயமாம். மரம் வாங்கிச் சாமான்கள் செய்வதென்றால், கிரயம் அதிகமாகும்; அவற்றை ஏலச்சாலைகளில்போய்பார்த்து வாங்கலாம், அல்லது அவஸர நிமித்தமாக விற்கப்படுபவையும் வாங்கலாம்.

சமையற் பாத்திரங்கள்:—குடும்பங்களிலே வழங்கக்கூடிய பாத்திரங்களாவன:—

1. செம்பு, அல்லது பித்தளைப் பாத்திரங்கள்
2. மட்பாத்திரங்கள்.
3. ஈயப்பாத்திரங்கள்.

இவற்றுள் மட்பாத்திரங்கள் மேல், ஏனென்றால் அவை நயமாகக் கிடைக்கும்; பளுவிராது; அவற்றில் புளிசம்பந்தமான உணவுப்பொருள்களை பயமில்லாமல் வைத்திருக்கலாம். களிம்பு உண்டாகாது. அவற்றைச் சுத்தம்செய்தல் சுலபம், அவை எளிதில் உடையும் சுபாவ முடையதால், அநேக குடும்பங்களில் இப்போது பித்தளைச் சமான்கள உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

பித்தளையால் கெடுதியே யொழிய அவ்வளவு சுகமில்லை· சுலபமாக உடையாது என்பது தான் சுகம். பித்தளைப் பாத்திரங்களில் புளிசம்பந்தமான பதார்த்தங்களை வைத்திருத்தல் கூடாது. ஏனென்றால், அவற்றில் களிம்புஏறிவிடும். பித்தளைக் களிம்பு ஓர் விஷம். அதனால் அப்பாத்திரங்களுக்கு உட்புறம் ஈயம் பூசப்படுகிறது, ஈயம் பூசின பாத்திரத்தில், எந்த உணவையும் வைத்திருக்கலாம். ஆனால் அதைத் துலக்கும போதெல்லாம் கொஞ்சம் ஈயம் வந்துவிடும்: இங்ஙனம் வர வர ஈயம் குறைந்து வருகிறதை ஜாக்கிரதையாகக் கவனித்தல் வேண்டும் சந்தேகம் ஏற்பட்டவுடனே மறுபடியும் ஈயம் பூசுதல் அவசியமாம்.

ஈயப்பாத்திரங்கள்:—இவை முக்கியமாக புளி சம்பந்தமான பதார்த்தங்களை வைத்துக்கொள்வதற்கு உபயோகிக்காதிருப்பது மேல். அப்பாத்திரங்களில் சமையலான வஸ்துக்களைச் சாப்பிட்டுக்கொண்டு வர வர அசௌக்கியம் உண்டாகும். ஈயத்துக்கும் களிம்பு உண்டு; அக்களிம்பு ஓர் விஷம்; உஷ்ணம் ஏற, ஏற அஃதுண்டாகும்.

இந்த தேசத்தில் முக்கியமாகப் பிராமணர்கள் வீட்டில் சாதம் சமைப்பதற்கு வெண்கலப் பானையும், குடிஜலம் வைத்துக் கொள்வதற்கு செப்புக்குடமும், மற்றக் காரியங்களுக்குக் கற்சட்டியும் வழங்கி வருகின்றன.

கற்சட்டிகள் மரக்கல்லாலானவை. இவை மட்பாத்திரங்களைப்போல அவ்வளவு சுலபமாக உடையக்கூடியவை அல்ல. மேலும் சகல விதமான உணவுகளையும் கற்சட்டிகளில் வைத்திருக்கலாம் களிம்புகிடையாது.

மேலே சொன்ன காரணங்கள்பற்றி, கற்சட்டிகளும், மட்சட்டிகளுமே சிலாக்கியமான சமையற் பாத்திரங்கள் என்பது தெளிவாயிற்று.

குடிநீர் வைத்துக்கொள்வதற்கு உபயோகப்படும் செப்புக் குடங்களின் வாய் சிறிதாக இருக்கிறது. அவற்றை உள்ளேசுத்தம்செய்தல் சுலபமன்று. உட்புறம் நன்முகச் சுத்தமில்லாதபாத்திரத்தில் குடிநீர் எங்ஙனம் சுத்தமாகயிருக்கும். ஆதலால் வாயகன்ற பாத்திரங்களை உபயோகிப்பது நலம். ஜலம் குடிக்கிறதற்கு வெண்கல லோட்டாக்கள் சுகமாம்.

போஜனகலம்:—நமது தேசத்தில் இலைகளில் சாப்பிடுகிறார்களே, இஃதோர் நல்ல வழக்கம். பீங்கான் முதலிய தட்டுகளில் சாப்பிடுதல் அவ்வளவு சுத்தமுமன்று, சுகமுமன்று. சாப்பிட்டான இலைகள் எறிந்துவிடப்படுகின்றன; அவற்றிலே மறுபடியும் சாப்பிடுவதில்லை. ஆகையால் இலைகளே மிகப் பரிசுத்தமான கலங்களாம். மேலும் நயமானவை; இந்த வழக்கத்தைப் போதித்து, அதனை நாளது வரையில் கைப்பற்றிவந்த பிராமணர்களே அதனைமறந்தோ அல்லதுஅநாகரீகமெனக்கருதியோ விட்டுவிட்டார்களென்றால் மற்றவர்களைப்பற்றிக்கேட்பானேன். நல்லகாலம், கிராமங்களிலே அக்கிரகாரத்தில், எவனும் தட்டில் சாப்பிடுகிறதில்லை. அங்கே இதர குடும்பங்களும் இலைகளிலே தான் சாப்பிடுகிறார்கள். இந்த ஆரோக்கியத்துக்குரிய வழக்கம் பட்டணங்களிலும் ஆரம்பித்துப் பரவுதல் சுகமாம். இலைகளிலே வாழை இலைதான் உத்தமம்; தையல் இலைகளால் வருத்தமேயொழிய சுகமில்லை.

சாமான்களைப் பழுது பார்த்தல்:—சாமான்களை ஜாக்கிரதையாக உபயோகித்தால், அவை நீண்டகாலம் உறுதியாகஇருக்கும்; ஏதாவதொரு சிறிய பழுது உண்டானால், உடனே அதனைச் சீர்ப்படுத்தல் வேண்டும்; இல்லாவிட்டால், வர,வர பழுது பெரிதாகி, சாமான் பிரயோஜனமில்லாமற் போவதுந்தவிர, சிலவும் அதிகமாகும்; இரட்டை நஷ்டம் மேலும் பழுதுள்ள சாமான்கள் கண்களுக்கு அவலக்ஷணமாக இருக்குமல்லவா? இதனைக் கவனிக்காத குடும்பம் எங்ஙனம் ஒழுங்காக இருக்கும்?

விளக்குகள்:—விளக்குகள் பலவகைப்படும்.

மண் விளக்கு	பித்தளை விளக்கு
கல் விளக்கு	கண்ணாடி விளக்கு

இவற்றுள் கல் அல்லது பித்தளை விளக்கு மேலாம். மண் விளக்குச் சுலபமாக உடைந்து போகும். மேலும் முதலில்எண்ணெய் குடிக்கும். கண்ணாடி விளக்குச் சுலபமாக உடையும்; எண்ணெய் குடிக்காது. இக்காரணங்கள் பற்றி கல் விளக்குகளும், பித்தளை விளக்குகளுமே சிலாக்கியமானவையாம்.

N. சுப்பிரமணி அய்யர்.

பலவகைக் குறிப்புகள்

போபால் சமஸ்தானத்தைச்சேர்ந்த மேஜர் நவாய்ஷிடா ஒபீதுல்லாகான் தமது பந்தயக் குதிரைகள் அனைத்தையும் யுத்தத்திற்குக் கொடுத்து விட்டதாக ஒரு கெவர்ன்மெண் டறிக்கை கூறுகிறது.

ஜூலை 11-ந்தேதி வரையில் இந்தியாவிலுள்ள சகல பாங்கிகளிலும் சர்க்கார் உத்தியோகசாலைகளில் வெளியிடப்பட்டுள்ள இரண்டாவது யுத்தக்கடன் பத்திரங்களின் தொகை 19-கோடியே 98-ஆயிரத்து 300 ரூபாயாகும்.

பூனா சென்னை ஆகிய விடங்களிலிருந்து புதிய ஜுரம் பங்களூருக்கும் பரவி விட்டது. அங்குள்ள தாபாபீஸ் சிப்பந்திகள் பலருக்குஇப்புதியஜுரம் கண்டிருப்பதாய்ச்சொல்லப்படுகிறது.

உப்பு விளைவை அதிகப்படுத்த இந்தியாகவர்ன்மெண்டார் அனுஷ்டித்த முறைகள் திருப்திகரமான பலன் தந்திருக்கிறதென்றும் உப்பின் விலை இனிதூக்கிவிற்பதற்கு நியாயமேகிடையாதென்றும் பயோனியர் பத்திரிகை அறிவிக்கின்றது.

ஜூலை மாதம் 12 ந்தேதி வரையில் இந்தியாவிலுள்ளசகல பாங்கிகளிலும் சர்க்கார் ஆபீசுகளிலும் வெளியிடப்பட்டுள்ள யுத்தக்கடன் பத்திரங்களின் தொகை 19 கோடியே 13 லட்சத்து 91 ஆயிரத்து 300 ரூபாயாகும்,

கூடிய சீக்கிரம் பார்லிமெண்டின் இருசபைகளிலும் சீர்திருத்தப் பிரேரணைகளைப் பற்றி வாதம் நடைபெறுமென்றும். 1919-ம் வருஷம முடிந்த பின்னரே சட்டம் செய்வதைப்பற்றி ஆலோசிக்கப் படுமென்று லண்டனில் பலர் பேசிக்கொள்வதாயும் 'மெட்ராஸ் மெயில்' பத்திரிகையின் லண்டன் நிருபர் அறிவிக்கிறார்.

சிங்கப்பூரில் வசிக்கும் சீனக்காரர்களுக்குள் ஒரு மாதிரியான புதிய ஜுரம் வியாபித்திருக்கிறதென்றும், பல சர்க்கார் உத்தியோகசாலைகளில் சிப்பந்திகள் பாதிக்கு மேலாக ஆஜராவதில்லை யென்றும், டிங்கியூ என்றமெற்றோர் கொடிய ஜுரமும் ஜனங்களைச் சூறையாடி வருவதாயும் ரங்கூனிலிருந்து வந்த தந்தி கூறுகிறது.